
# நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலில் 20–ந் தேதி கும்பாபிஷேகம்

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல்



சென்னை, மே 18–

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலில் 20–ந் தேதி கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி சென்னை நங்கநல்லூர் ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் 20–ந் தேதி திருக்குடமுழுக்கு நடைபெற இருப்பதை முன்னிட்டு அஷ்டபந்தன மருந்து சாத்தும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டார்.

அப்போது அவர் கூறியதாவது:


இத்திருக்கோயிலில் பாலாலயம் கடந்த மாதம் 25ம் தேதி நடைபெற்றது. திருக்குடமுழுக்கை முன்னிட்டு 16ம் தேதி யாக சாலை வளர்க்கப்பட்டு, லட்சுமி, நரசிம்ம சுதர்ஷன ஹோமங்கள், விசேஷ சந்தி, இரண்டாம் கால பூஜை, ஹோமங்கள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து அஷ்டபந்தன மருந்து சாத்தும் நிகழ்வு நடைபெற்றது. 19 ம் தேதி புண்யாஹவாசனம், காலசந்தி திருவாராதனம், அதிவாசத்ரய ஹோமம், வேதவிண்ணப்பம், சாற்றுமறை நிகழ்வும் நடைபெறுகிறது.

திருக்குடமுழுக்கு நாளான, 20ம் தேதி காலை, 5 மணி பிரதான ஹோமம், மகாபூர்ணாஹுதி ஆகியவை நடைபெறவுள்ளது. காலை 8.00 மணி முதல், 9.30 மணிக்குள் திருகுடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் நீதிபதிகள் மகாதேவன், ஆதிகேசவன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையர்கள் ஜெயராமன், ரேணுகா தேவி மற்றும் திருக்கோயில் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உலக உயர் ரத்த அழுத்த தினம்

# டாக்டர் மோகன்ஸ் நீரிழிவு சிறப்பு மையம் நடத்திய விழிப்புணர்வு பேரணி




சென்னை, மே 18–

இந்தியாவின் முன்னணி நீரிழிவு மருத்துவமனையான டாக்டர் மோகன்ஸ் நீரிழிவு சிறப்பு மையத்தின் தாம்பரம் கிளை சார்பாக உலக உயர் ரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் ஏராளமான பேர் பங்கேற்றனர்.

டாக்டர் மோகன்ஸ் நீரிழிவு சிறப்பு மையத்தின் தாம்பரம் கிளையில் இருந்து துவங்கிய இந்த பேரணி தாம்பரம் வேளச்சேரி மெயின் ரோடு வரை நடைபெற்றது. நீரிழிவு நோய் நிபுணர்கள் மற்றும் டாக்டர் மோகன்ஸ் தாம்பரம் கிளையின் மருத்துவர்கள், டாக்டர் பிரசன்ன குமார் குப்தா மற்றும் டாக்டர் செல்வகுமார் இருவரும் நிகழ்வை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். பின்பு, உயர் ரத்த அழுத்தத்தை எவ்வாறு தடுப்பது மற்றும் கட்டுப்படுத்தப்படாத உயர் ரத்த அழுத்தத்தின் பின்விளைவுகள் குறித்து இருவரும் பேசினர்.

மேலும் அவர்கள் பேசுகையில், உயர் ரத்த அழுத்தம் தற்போது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. அதுவும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம் இல்லை என்றால் அது ஒரு அதிசயம் தான். நீரிழிவு நோய் இருப்பவர்களில் ஐந்தில் ஒருவருக்கு உயர் ரத்த அழுத்தம் உள்ளது. இதனை கட்டுப்பாட்டில் வைப்பது மிகவும் அவசியம். இல்லையெனில் இவை இருதயம், கல்லீரல் மற்றும் பக்கவாதம் சம்பந்தமான நோய்களை உருவாக்கும். மருந்துகள், வாழ்க்கை முறை மாற்றங்கள், உணவு முறை, உடற்பயிற்சி, யோகா போன்றவற்றால் இதனை கட்டுப்பாட்டில் வைக்க முடியும் இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

நீரிழிவுக்கான அனைத்து பராமரிப்பு சிகிச்சைகள், நீரிழிவு கண் பராமரிப்பு, நீரிழிவு பாத பராமரிப்பு, நீரிழிவு இருதய பராமரிப்பு, உணவு ஆலோசனை மற்றும் மிக துல்லியமாக நீரிழிவு நோய் கண்டறிதல் ஆகியவற்றில் டாக்டர் மோகன்ஸ் நீரிழிவு சிறப்பு மையம் சிறந்து விளங்குகிறது.

## பிரேசிலில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம்

# தமிழக மாணவி ஜெர்லின் அனிகாவுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பாராட்டு



சென்னை, மே 18–

பிரேசிலில் நடைபெற்ற காது கேளாதோருக்கான 24–வது கோடைக்கால ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கங்கள் வென்ற இறகுப்பந்து வீராங்கனை ஜெர்லின் அனிகா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் இரா.ஆனந்த குமாரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டி –2022ல் தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை விமானநிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான 24–வது கோடைகால ஒலிம்பிக் – 2022 போட்டி பிரேசில் நாட்டின் கேக்சியாஸ் டோசுல் நகரில், 2022 மே மாதம் 1 நந்தேதி முதல் 15 நந்தேதி வரை நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்ற இந்திய அணியில் தமிழ்நாட்டை சார்ந்த நீச்சல் வீராங்கனை ஆர். சினேகா, தடகள வீராங்கனை சமீகா பர்வீன் முஜிப், இறகுப்பந்து வீராங்கனை ஜெர்லின் அனிகா, டென்னிஸ் வீரர் பிரித்வி சேகர், தடகள வீரர்கள் மணிகண்டன் மற்றும் சுதன் ராஜேந்திரன் ஆகியோர் இடம்பெற்றனர். இக்குழுவினருடன் டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர் மூர்த்தி, முதன்மை டென்னிஸ் பயிற்சியாளர் ஸ்டாலின், நீச்சல் பயிற்சியாளர் ஸ்ரீதர் ஆகியோரும் பிரேசில் சென்றிருந்தனர்.

இப்போட்டியில் மதுரையைச் சார்ந்த இறகுப்பந்து வீராங்கனை ஜெர்லின் அனிகா மகளிர் ஒற்றையர் பிரிவு, கலப்பு இரட்டையர் பிரிவுகளில் தங்கம் வென்றுள்ளார். மேலும் இந்திய அணி சார்பில் குழுப்போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இப்போட்டியில் மூன்று தங்கப்பதக்கங்கள் வென்று ஜெர்லின் அனிகா சாதனை படைத்துள்ளார்.

டென்னிஸ் வீரர் பிரித்வி சேகர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப்பதக்கமும், ஆடவர் இரட்டையர் பிரிவில் வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார். தடகள வீராங்கனை சமீகா பர்வீன் நீளம் தாண்டுதலில் 9வது இடமும், மும்முனை தாண்டுதலில் 4வது இடமும், தடகள வீரர் மணிகண்டன் நீளம் தாண்டுதலில் 6–வது இடமும், சுதன் மும்முனை தாண்டுதலில் 4–வது இடமும் பெற்றுள்ளனர்.

போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஜெர்லின் அனிகா மற்றும் பிரித்வி சேகர் ஆகியோர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தனர். அவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் விமானநிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர், பிரேசிலில் நடைபெற்ற காது கேளாதோருக்கான 24–வது கோடைக்கால ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கங்கள் வென்ற இறகுப்பந்து வீராங்கனை ஜெர்லின் அனிகா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் இரா.ஆனந்த குமாரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல முதுநிலை மேலாளர் சுஜாதா, நேரு விளையாட்டு அரங்க மேலாளர் வெங்கடேஷ், விடுதி மேலாளர் செந்தில், வேளச்சேரி நீச்சல் விளையாட்டு அரங்க அலுவலர் க.பிரேம்குமார், தமிழ்நாடு காது கேளாதோர் விளையாட்டு கவுன்சில் தலைவர் பாலாஜி, பொதுச் செயலாளர் பொன்னுசாமி, சைகை மொழி பெயர்ப்பாளர் சுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஐ.டி.ஐ. முடித்தவர்களுக்கு 12ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ்: அரசாணை வெளியீடு

சென்னை, மே.18–

தமிழ்நாட்டில் உள்ள ஐ.டி.ஐ.க்களில் படித்துவிட்டு மேற்படிப்பைத் தொடரமுடியாதவர்களின் நிலையை கருத்தில்கொண்டு, ஐ.டி.ஐ.க்களில் படிப்பவர்களுக்கு 10 மற்றும் 12ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் வழங்கப்படும் என்று தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் சட்டசபையில் அறிவித்திருந்தார்.

அதை செயல்படுத்தும் விதமாக, 8–ம் வகுப்புக்கு பிறகு ஐ.டி.ஐ.க்களில் சேர்ந்து படிப்பை முடிக்கும் மாணவர்களுக்கு 10–ம் வகுப்புக்கு இணையான சான்றிதழும், 10–ம் வகுப்புக்கு பின்னர் ஐ.டி.ஐ. படிப்பை முடிக்கும் மாணவர்களுக்கு 12–ம் வகுப்புக்கு இணையான சான்றிதழும் பள்ளிக்கல்வித்துறை மூலம் வழங்கப்படும் என்று தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. ஐ.டி.ஐ. படிக்கும் மாணவர்கள் உயர்கல்வியை தொடரும் வகையிலேயே இந்த இணை சான்றிதழ் வழங்கப்படுகிறது என்றும், இது அரசு வேலைவாய்ப்புக்கோ அல்லது இதர வேலைவாய்ப்புக்கோ பொருந்தாது என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருமலா – திருப்பதியின் நித்ய நிவேதனா நிகழ்ச்சி, சமீபத்தில் திருப்பதியில் நடந்தது. குரு நிறைமதி குமாரின் சிஷ்யைகள் 9 பேர் இந்நிகழ்ச்சியில் நடனம் ஆடினார்கள்.

புஷ்பாஞ்சலியைத் தொடர்ந்து ஏன் பள்ளி கொண்டீரய்யா...? (நீரஜ் பிரபாகரன்), தோளாயம் ஹரி (பத்மினி ரவிச்சந்திரன்), கோவிந்தா... கோவிந்தா (சாய் சரண்யா சீனிவாசன்), தசாவதாரம் (அபர்ணா சீனிவாசன்), மாலை சாற்றினார்... (பானுப்ரியா ஹேமந்த் குமார், தயாநிதா செந்தில் குமார்), சாந்தாகாரம் தேவா (பூணம் பாலா நேரு), ஆடாது அசங்காது... (சாதனா ரவிஷங்கர்), மாடு மேய்க்கும் கண்ணா... (தாரிணி ரவிகுமார்) பாடல்களுக்கு ஆடிய மாணவிகளின் நடனம் ரசிக்க வைத்தது. பிரம்மம் ஒக்கடே.... பாட்டுக்கு 9 பேரும் ஆடிய ஆட்டத்தில் பார்வையாளர்களின் கை தட்டல் அடங்க ஒரு நிமிடம் ஆனது.

# இந்தியன் ஆயில் தமிழ்நாடு தலைவராக பெட்ரோலியத் துறை நிபுணர் வி.சி. அசோகன் பொறுப்பேற்றார்



சென்னை, மே.18–

பொதுத்துறை இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் தலைவராகவும், செயல் இயக்குனராகவும் வி. சி. கணேசன் பொறுப்பேற்றார்.


இந்த நிறுவனத்தில் இவர் 30 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இத்துடன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் உள்ள இதர பெட்ரோலிய நிறுவனங்களின் ஒருங்கிணைந்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளராகவும் இவர் செயல்படுவார். குறிப்பாக இவர் பெட்ரோலிய பொருட்கள் விற்பனை நிர்வாக செயல்பாடுகள் மற்றும் சர்வதேச அளவில் மார்க்கெட்டிங், விற்பனை துறையில் தேர்ந்த அனுபவம் பெற்றவர் ஆவார்.

தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் பெட்ரோலியத்துறை நிபுணர் உலக நாடுகள் முழுவதும் சுற்றி இந்தியன் ஆயில் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர், திருச்சியை சேர்ந்தவர் வி.சி. அசோகன் . இவர் திருச்சி ரீஜினல் என்ஜினீயரிங் கல்லூரியில் வர்த்தக மேலாண்மை பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இலங்கையில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனத்தின் துணை நிறுவனமான லங்கா இந்தியன் ஆயில் நிறுவனத்தில் விற்பனைப் பிரிவில் துணைத் தலைவராக செயல்பட்டபோது உலக அளவில் எரிபொருள் விற்பனை துறையில் மிகச்சிறந்த அனுபவத்தைப் பெற்றவர்.

இந்நிறுவனத்தில் கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, உத்திரபிரதேசம், குஜராத் போன்ற பல்வேறு மாநிலங்களிலும் விற்பனை மற்றும் மார்க்கெட்டிங் பிரிவில் பல்வேறு தலைமைப் பதவிகளை நிர்வகித்த அனுபவம் பெற்றவர்.

தமிழ்நாடு புதுச்சேரி மாநில செயல் இயக்குனராகவும், மாநில தலைமை பொறுப்பையும் ஏற்றுள்ள வி.சி. அசோகன், இதற்கு முன்பு கேரள மாநிலத்தின் செயல் இயக்குனராக செயல்பட்டு அங்கு பல புரட்சிகரமான புதுமை மார்க்கெட்டிங் திட்ட முயற்சிகளுக்கு திட்டமிட்டு வழிகாட்டி அதை வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ளார்.

இவர் பல நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் உலக அளவிலான முன்னணி நிறுவனங்கள் மற்றும் பெட்ரோலிய அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றியுள்ளார். இவரது நிர்வாகத்தில் இந்தியன் ஆயில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநில அமைப்புகள் சிறப்பாக செயல்படும்.



புத்த பூர்ணிமாவையொட்டி தம்மபதம் என்ற புத்த மத அறநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டியாரிடம் இருந்து மியான்மர் நாட்டின் கவுரவத் தூதர் ரங்கநாதன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். ஆடிட்டர் ஜெ. பாலசுப்பரமணியன், புத்தக பதிப்பாளர் ஆர். நடராஜன் உடன் உள்ளனர்.


**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **V.ASTALAKSHMI, D/o. K.Veerasamy,** aged **35** years Permanently residing at **No. 1/1065, Thiruvengadam Nagar 2nd Street, Vadakkupattu Main Road, Medavakkam, Chennai - 600100.** Intend having my Enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai-104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**V.ASTALAKSHMI,**

**NAME CHANGE**

I, **BAGHYALAKSHMI,** D/o. Late. Ex MWO (HFO) B. Ethiraj Naidu, aged about 70 years, Resident at No. 1446, I –Block, 33rd Street, Anna Nagar West, Chennai – 600 040, have Changed my Name from **BAGHYALAKSHMI** to **BHAGYALAKSHMI** vide affidavit dated **17th day of May 2022** at Chennai.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருவள்ளூர்**
**அ,வ,எண் 23/2022**

ராமமூர்த்தி மற்றும் 2 நபர்கள் வாதிகள்

எதிர்

மச்சகந்தி கபெ ஜீவா
சிவன் கோயில் தெரு, தொழுவூர்,
திருவள்ளூர் தாலுக்கா மற்றும்
மாவட்டம் 602 025

8ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்கண்ட அசல் வழக்கில் வாதிகள், பிரதிவாதிகளான பாளையம் மற்றும் தங்களுடன் சேர்த்து 8 நபர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்துள்ளனர். அதன்பேரில் வருகின்ற 02.06.2022ம் தேதி அன்று தங்களுடைய வருகைக்காகவும் மற்றும் ஆட்சேபனைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது மேற்படி தாவாவில் தங்களுக்க ஆட்சேபனை இருந்தால் அதனை மேற்கண்ட வாய்தா தேதி அன்று காலை 10,00 மணியளவில் மேற்படி நீதி மன்றத்தில் தாங்கள் நேரில் ஆஜராகியோ அல்லது தங்கள் வழக்கறிஞரின் மூலம் ஆஜராகியோ தங்கள் ஆட்சேபனையை தெரிவிக்கலாம் தவறும் பட்சத்தில் மேற்கண்ட அசல் வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்க படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

S.நெடுஞ்செழியன்,
வாதிகள் தரப்பு வழக்கறிஞர்
திருவள்ளூர்

**பஞ்சாப் நேஷனல் வங்கி**
**சர்க்கிள் சாஸ்த்ரா சென்டர் - சென்னை தெற்கு**

மெசானைன் தளம், 45,49, R H ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14
Tel: 044 - 28113137, Email : cs8215@pnb.co.in

**டெண்டருடன் கூடிய விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், பஞ்சாப் நேஷனல் வங்கி, சர்க்கிள் சாஸ்த்ரா சென்டர் சுவாதீனமாகியுள்ள கீழ்க்கண்ட அட்டவனையில் குறிப்பிட்டுள்ள வாகனங்கள், "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் (சீல் செய்யப்பட்ட டெண்டர் கவர்) **07.06.2022 அன்று நண்பகல் 12.00 மணிக்கு ஏலம் விடப்படும்.**

| கணக்கு எண் & பெயர் | வாகனத்தின் விவரம் | ரிசர்வ் விலை & EMD (10%) தொகை |
|---|---|---|
| 644700NG00000129 சுக்ரா ஆட்டோ இன்ஜினியர்ஸ் | Regd.No : TN 09 CH 5486<br>Make / Model : Suzuki Baleno Zeta | ரிசர்வ் விலை: Rs..4,00,000/-<br>EMD தொகை: Rs.40,000/-<br>ஏல உயர்வு தொகை : Rs.2,000/- |

| ஏலம் நடைபெறும் இடம் | ஏலம் திறக்கப்படும் தேதி |
|---|---|
| பஞ்சாப் நேஷனல் வங்கி, சர்க்கிள் சாஸ்த்ரா சென்டர் சென்னை தெற்கு, மெசானைன் தளம், 45,49, RH ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14 | **07.06.2022** நேரம்: நண்பகல் 12.00 மணி |

**EMD Remittance : Submission of EMD through "DEMAND DRAFT" in favour of PUNJAB NATIONAL BANK Payable at Chennai**

விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்க கடைசி தேதி: **04.06.2022** மாலை **4.00** மணி வரை

வாகனத்தினை பார்வையிடும் தேதி : **04.06.2022** - 11.00 am to 4.00 pm

மேலும் விவரங்களுக்கு உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள், பஞ்சாப் நேஷனல் வங்கி, முதன்மை மேலாளர், சர்க்கிள் சாஸ்த்ரா சென்டர் சென்னை தெற்கு, அலுவலக நேரங்களில் Mob: 98846 17777 தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அனுமதிக்கப்பட்ட M/s. சக்தி அசோசியேட்ஸ், A.இஸ்மாயில் பாஷா Mob: 8838860859 ஐ தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சென்னை
தேதி: 13.05.2022

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி

**ஜெட்மால் ஸ்பைசஸ் மற்றும் மசாலா லிமிடெட்**

33/1, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை 600 007

Tel: 04448508024 Email: Jetmallltd@gmail.com Website: Jetmallltd.com
CIN: U15500TN2012PLC087533 GSTIN: 33AACCJ9645B1ZR Scrip Code: 543286

**மார்ச் 31, 2022–ல் முடிந்த அரையாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

(ரூ.லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த அரையாண்டு | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|
| | | 31.03.2022 | 30.09.2021 | 31.03.2021 | 31.03.2022 | 31.03.2021 |
| | | தணிக்கை செய்தது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்தது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 67.57 | 233.29 | 199.67 | 300.86 | 1123.46 |
| | இதர வருமானம் | 16.71 | 0.19 | 0.38 | 16.90 | 2.49 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 55.18 | (58.66) | (82.78) | (3.49) | 7.14 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின) | 55.18 | (58.66) | (82.78) | (3.49) | 7.14 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின) | 59.49 | (58.66) | (82.78) | 0.83 | 4.73 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டத்தை) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)★ | 59.49 | (58.66) | (82.78) | 0.83 | 4.73 |
| 6 | சம பங்கு மூலதனம் | 599.29 | 599.29 | 350.29 | 599.29 | 350.29 |
| 7 | 31 மார்ச், 2022-ல் முடிந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | 343.46 | | 93.63 | 343.46 | 93.63 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | |
| | 1. அடிப்படை | 0.99 | (0.98) | (2.36) | 0.01 | 0.14 |
| | 2. பலமிழந்தது | 0.99 | (0.98) | (2.36) | 0.01 | 0.14 |

குறிப்பு:

1. செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் மேற்கண்ட அரையாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரையாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www. jetmallltd.com–ல் உள்ளது.
2. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவினால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 17 மே 2022 அன்று நடைபெற்ற கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

**ஜெட்மால் ஸ்பைசஸ் மற்றும் மசாலா லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்/–**
**ரத்தன் சந்த் லோடா**
**நிர்வாக இயக்குநர்**
**DIN: 01534269**

இடம்: சென்னை
தேதி: 17/05/2022

# 'Soorarai Pottru' bags six awards at Osaka Film Festival



Chennai, May 18: Actor Suriya's block buster movie 'Soorarai Potru' has won multiple awards at the Osaka Tamil International Film Festival. The production house took to Twitter on Monday, May 16 to state that the film has won 6 awards at the Film Festival.

At the Osaka Tamil International Film Festival, 'Soorai Pottru' won the awards for Best Tamil Film, Best Music Director, Best Director, Best Actor, Best Art Director and Best Production House of the year.

'Soorarai Pottru' which was directed by Sudha Kongara is a biography of GR Gopinath who started the airline Air Deccan. The Tamil film gained so much fame and it was critically acclaimed all over the world. The film is now currently being remade in Hindi with Akshay Kumar as the lead. The Hindi remake is also directed by Sudha Kongara.

On the work front, Suriya is now shooting for the tentatively titled 'Suriya 41' which is directed by Bala and he will soon be starting the shoot for 'Vaadivaasaal' which is directed by Vetrimaaran. Suriya is also teaming with director Siva for his next.

Suriya has also done an extended cameo role in Lokesh Kanagaraj's 'Vikram' that features Kamal Haasan, Vijay Sethupathi and Fahadh Faasil in the lead roles.

# 'Final Cut' to premier at Cannes Film Festival



Cannes, May 18: French zombie comedy 'Final Cut' will premier at Cannes Film Festival 2022 on Tuesday.

A remake of the Japanese zombie comedy 'One Cut Of The Dead', the film reflects the global passion and never ending love of making new ways of bringing the living dead to the silver screen.

Directed by French filmmaker Michel Hazanavicius, who also directed the Oscar winning film the "The Artist", "Final Cut' is the story of a filming of a zombie movie, said Cannes festival artistic director Thierry Fremaux. "The film talks about the passion of making movies, about the collective effort," added Fremaux.

It is the second time a zombie film will be opening the Cannes, after American director Jim Jarmusch's Adam Driver-starring 'The Dead Don't Die' in 2019.

For India too, the Cannes is a moment of high prestige. Marking 75 years of both India's Independence and India France relations, a high-level Indian delegation led by Union Information and Broadcasting Minister Anurag Singh Thakur will attend the 12-day festival where India is designated as the 'Country of Honour' this year.

Four Indian films have been selected as the official candidates at Cannes this year. These films include the acclaimed internationally co produced documentary 'All That Breathes' by Delhi-based director Shaunak Sen.

The story is about two Muslim brothers who after rescuing the predator Black Kite from the polluted air of the national capital have made it their mission to rescue the falling birds affected by the grey skies of New Delhi. The documentary film had won a Sundance Award.

# 'Doctor Strange 2' tops North American box office




Los Angeles, May 18: Disney's presentation of Marvel's superhero film 'Doctor Strange in the Multiverse of Madness' easily maintained its reign in North America, adding an estimated 61 million US dollars during its second weekend of release.

After 10 days on the big screen, the film has grossed 291.9 million dollars in North America for a global cume of 688.1 million dollars to date, according to studio figures released by measurement firm Comscore on Sunday.

Based on Marvel Comics featuring the character Doctor Strange, the blockbuster is the sequel to 2016's 'Doctor Strange.' Directed by Sam Raimi, the film stars Benedict Cumberbatch as the title role, along with Elizabeth Olsen, Benedict Wong, Rachel McAdams, Chiwetel Ejiofor, and Xochitl Gomez.

In a distant second place, DreamWorks Animation and Universal Pictures' animated film 'The Bad Guys' took in 6.9 million dollars on its fourth weekend for a North American total of 66.28 million dollars.

Rounding out the top three, Paramount Pictures' family-friendly film 'Sonic The Hedgehog 2' brought in 4.55 million dollars on its sixth weekend, raising its cumulative total to 175.7 million dollars.

# Vicky Kaushal turns 34



Mumbai, May 18: B-town hearthrob Vicky Kaushal on Monday turned 34, the actor received warm wishes from family, friends and colleagues as he spends the day in New York with wife Katrina.

Currently on vacation in the US with Katrina Kaif, social media is abuzz with various pictures of the happy Bollywood couple. Sharing pictures of them together, Katrina wrote, "New York Wala Birthday. My (heart emoticon). Simply put ...YOU MAKE EVERYTHING BETTER." The actor's dad and stunt director Sham Kaushal shared a collage of his childhood picture with him and his grown-up look and captioned it: "Wish u a very Happy Birthday Puttar. Always love & blessings. Feeling blessed & proud to have a son like u. Rab Rakha." Vicky reacted to the post, saying, 'Love you Dad!" His bother brother Sunny Kaushal posted a "smirk" photo from Vicky's wedding function of the two siblings, and wrote: "Janamdin mubarak ho meri jaan Vicky Kaushal." Actress Sara Ali Khan took to Instagram to wish her co-star from yet untitled film that was shot in Bhopal, besides Aditya Dhar's "The Immortal Ashwathama".

Sharing some unseen photos of herself with Kaushal, the actress captioned the pictures, "Happiest Birthday Bickey Oye!! Have the best one. You deserve all the happiness, peace, contentment, and success that Inshallah keeps coming your way. Keep shining. Jai Bholenath." Vicky was last seen in the Shoojit Sircar's historical drama 'Sardar Udham' for which he received high praise from both audience and critics alike.

# Netflix launches 'Spiderhead' trailer



Los Angeles, May 18: In a curious but tasty blend of science fiction psychological thriller and dark comedy, Netflix has come up with the trailer of its latest film 'Spiderhead'. Chris Hemsworth has come back from 'Thor: Love and Thunder' and is running a futuristic state of the art penitentiary which is both unsettling and yet carries a strong undercurrent of morbid humour. Just looking at this you can be sure of one thing, you do not want to enter this prison, no matter how much a 'privilege' Chris Hemsworth may call it.

Based on the George Saunders short story of the same name, director Joseph Kosinski comes forth to create an edge of the seat film which is sure to put in audiences for a ride. The director is best known for movies such as 'Tron Legacy' and his Tom Cruise films 'Oblivion' and his latest upcoming film Top Gun: Maverick a sequel to the 1986 Hollywood classic The official Netflix synopsis reads: In a state-of-the-art penitentiary run by brilliant visionary Steve Abnesti (Chris Hemsworth), inmates wear a surgically attached device that administers dosages of mind-altering drugs in exchange for commuted sentences. There are no bars, no cells, or orange jumpsuits. In Spiderhead, incarcerated volunteers are free to be themselves. Until they're not. At times, they're a better version. Need to lighten up? There's a drug for that. At a loss for words? There's a drug for that, too. But when two subjects, Jeff (Miles Teller) and Lizzy (Jurnee Smollett), form a connection, their path to redemption take a twistier turn, as Abnesti's experiments start to push the limits of free will altogether.



# Japan allows vaccinated tourists from 4 more nations

Tokyo, May 18: Japan will allow the vaccinated tourists from four countries -- the US, Australia, Thailand and Singapore -- to have small-scale tours as a trial, the government said on Tuesday.

The Japanese government said that it will accept small-scale tours for vaccinated tourists from the four countries as a trial later this month toward the full-scale reception of foreign visitors planned for June, Kyodo News Agency reported.

The country had closed its doors to foreign visitors since the early stage of the Covid-19 pandemic in 2020.

Since March, Japan had been relaxing its travel restrictions in phases, accepting business-people, technical interns and students, as the Covid situation got better.

During the trial phase, small groups will be allowed to go on fixed package tours limited to areas where prefectural governments have agreed to accept them so that their activities can be managed, Kyodo said.

The visitors who have taken the three Covid-19 shots will be able to take part, according to the Ministry of Land, Infrastructure, Transport and Tourism.

The experiment will be done to see if they can grasp people's movements and learn how to respond if a Covid case is identified, when the borders open.

Currently, the Asian country has allowed 10,000 visitors a day, but it is considering to double the cap to 20,000 in June.

Amid Covid travel restrictions, the number of foreign tourists to the country in 2021 fell 99.2 per cent from the pre-pandemic year of 2019 to a record-low 245,900, according to Kyodo.

# Ramgarh Vishdhari Wildlife Sanctuary



Jaipur, May 18: The Ramgarh Vishdhari Wildlife Sanctuary in Bundi district has been notified as Rajasthan's fourth tiger reserve.

State Chief Minister Ashok Gehlot on Tuesday took to Twitter to express his happiness.

"Happy to inform that Ramgarh Vishdhari of Bundi has been notified as the 4th Tiger Reserve of Rajasthan. Our government is committed to conserve wildlife. This is another dimension of the success of "Project Tiger" started by then Prime Minister Mrs. Indira Gandhi," Gehlot tweeted.

Union Environment Minister Bhupender Yadav on Monday informed that Ramgarh Vishdhari Wildlife Sanctuary was notified as the country's 52nd tiger reserve.

"Pleased to note Ramgarh Vishdhari Tiger Reserve has been notified today. The 52nd Reserve of India will conserve biodiversity and bring in ecotourism and development to the area.

"Under the leadership of PM Shri@ narendramodi ji, we are committed to preserving our wildlife," Union Environment Minister tweeted.

"The newly notified tiger reserve includes the tiger habitat between Ranthambore Tiger Reserve in the northeast and Mukundra Hills Tiger Reserve on the southern side and facilitates dispersal of tigers from Ranthambore Tiger Reserve," Yadav said in another tweet.

The Union Minister said the floristic diversity of this new tiger reserve makes it an important area for research and education.

"Historic and cultural sites like Bhimlat, Ramgarh palace would encourage eco tourism and provide employment opportunities to local communities," he added



# 10-day *Maha Kalika Yagam* held in Trivandrum

Trivandrum, May 18: The very rare 10-day 'Maha Kalika Yagam,' 4,000 year-old ritual inscripted in Vedas for appeasing Goddess Kali to reduce the ill effects of 'Kali Yuga', concluded here.

The Yagam concluded in the presence of several Aghoris led by '1008 Maha Mandleshwar Chief' Kailashpuri of Kashi, who arrived here to attend the Yagam from May 7 to 16.

The 'Maha Kalika Yagam' was performed with oblation of 303 rare Ayurvedic medicinal plants and 10,000 kg ghee at Pournamikkavu temple here in the presence of chief priests from 51 Shakti Peethas across the country.

Earlier, the rare Ayurvedic medicinal plants were collected from various South Indian States. Several sacred materials were brought here to offer in the sacred fire from 12 Jyotirlinga temples across the country.

Three fire-altars (havan kund) were made of 12,000 bricks (Ishtiaka) to perform the Yagam.

Maha Kalika Yagam was held at Pournamikkavu temple where 51 goddesses named after 51 Malayalam language alphabets were installed for the first time in India


## JETMALL SPICES AND MASALA LIMITED

33/1, Ritherdon Road, Vepery, Chennai - 600 007

Tel: 04448508024 Email: Jetmallltd@gmail.com Website: Jetmallltd.com
CIN: U15500TN2012PLC087533 GST IN: 33AACCJ9645B1ZR Scrip Code: 543286

**Statement of Standalone Audited Financial Results for the Half year and Year ended 31st March 2022**

(Rs. In Lakhs)

| S.No. | Particulars | Half Year Ended | | | Year Ended | |
|---|---|---|---|---|---|---|
| | | 31.03.2022 | 30.09.2021 | 31.03.2021 | 31.03.2022 | 31.03.2021 |
| | | Audited | Unaudited | Audited | Audited | Audited |
| 1 | Total Income from Operations | 67.57 | 233.29 | 199.67 | 300.86 | 1123.46 |
| | Other income | 16.71 | 0.19 | 0.38 | 16.90 | 2.49 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or extraordinary items) | 55.18 | (58.66) | (82.78) | (3.49) | 7.14 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or extraordinary items) | 55.18 | (58.66) | (82.78) | (3.49) | 7.14 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or extraordinary items) | 59.49 | (58.66) | (82.78) | 0.83 | 4.73 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] * | 59.49 | (58.66) | (82.78) | 0.83 | 4.73 |
| 6 | Equity Share Capital | 599.29 | 599.29 | 350.29 | 599.29 | 350.29 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet for the year ended 31st March 2022 | 343.46 | | 93.63 | 343.46 | 93.63 |
| 8 | Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations): 1. Basic: 2. Diluted: | 0.99 0.99 | (0.98) (0.98) | (2.36) (2.36) | 0.01 0.01 | 0.14 0.14 |

Note:

1. The above is an extract of the detailed format of Halfyearly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Half year and year ended Financial Results are available on the website of the Stock Exchange www.bseindia.com and on the Company's website www.jetmallltd.com

2. The above results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meetings held on 17th May 2022.

For Jetmall Spices and Masala Ltd

Place: Chennai
Date:17/05/2022

Sd/-
Ratanchand Lodha
Managing Director
DIN: 01534269